**தலைப்பு 304 - வளிமண்டலவியல் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 304 – வளிமண்டலவியல் திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1)ஆம் பிரிவின் பிரகாரம் வளிமண்டலவியல் திணைக்களத்தின் இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் 2024 மே 07 இல் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2)ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு 2024 மே 29 இல் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தை தவிர, 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வளிமண்டலவியல் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குிப்பிடப்பட்ட விடங்களில் என்னுடைய அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்பட்டுள்ளது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்விற்கான பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான்

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் ஆகியன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும்

பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

நிதிக்கூற்றுக்கள், ஒட்டுமொத்தமாக மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தொடர்பில் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களின் மீது தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்ளும் போது, மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணல் மற்றும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதற்கு, அவை தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் ஆகியவற்றால் ஏற்படுகின்றமை காரணமாக அமைகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாது, சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் நான் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரியதாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

**1.6. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.6.1 கட்டுநிதிக் கணக்கு மீதி**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் நிறுவனத்தால் பெறப்பட்ட கட்டு நிதியிலிருந்து ரூபா 631,439 ஆன தொகை திட்டமிட்டவாறு கொள்வனவு நடவடிக்கை உள்ளடங்கலாக வேலையை மேற்கொள்வதற்கு இயலாமையால் மீளாய்வாண்டு இறுதியில் திறைசேரிக்கு முரணாக இருந்தது. | மிகுதியாக இருக்கின்ற தொகை ரூபா 631,429 திறைசேரிக்கு அனுப்பப்பட்டிருந்தது. | திறைசேரியிலிருந்து பெறப்பட்ட பணம் முறையாக பயன்படுத்தப்பட வேண்டும். |

**1.6.2 கணக்கேடுகள் மற்றும் பதிவேடுகள் பேணப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாண இல. 891 இன் பிரகாரம் பிணைவைப்பு பதிவேடு பேணப்பட்டு நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் பிணைவைப்பு பதிவேடு பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பிணை வைப்பு பதிவேடு பிணைவைப்பு பதிவேடு முறையாக பேணப்பட்டு நாளது வரையாக்கப்பட வேண்டும். |

**2. நிதி மிளாய்வு**

**2.1 நிதி முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மூலதன செலவின விடயங்களிற்காக ரூபா 30 மில்லியன் மொத்தமான | பயிற்சி நிலையங்கள் தொடங்குவதற்கு வழங்கப்பட்ட ஏற்பாடுகள் பயிற்சி நிகழ்சித் | திறைசேரி ஏற்பாடுகளை முறையாக |

| | | | |
|---|---|---|---|
| | ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டதுடன் 04 ஏனைய மூலதன செலவின விடயங்களிற்காக செய்யப்பட்ட ரூபா 38.37 மில்லியன் 26 சதவீதம் முதல் 99.5 சதவீதமான வீச்சில் இருந்தது. | திட்டங்களின் ஆவணங்கள் எதிர்பார்க்கப்பட்டவாறு இன்மையால் செலவினங்களிற்கு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பயன்படுத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | பாதீட்டு மதிப்பீடுகள் நெகிழ்ச்சித் தன்மையற்று செய்யப் பட்டிருந்ததுடன் 04 செலவின விடயங்கள் தொடர்புபட்ட அடிப்படை ஏற்பாடுகளின் 70 சதவீதம் முதல் 400 சதவீதம் வரையான வீச்சில் அதிகரிப்பு அல்லது வீச்சியை கொண்டிருந்தமையால் முறையான எதிர்வுகூறல் மற்றும் நி.பி 66/66 இன் மாற்றங்கள் மூலம் 3 செலவின விடயங்களின் ஆரம்ப பாதீட்டிற்கு குறைநிரப்பு மதிப்பீடுகள் மூலம் 67 சதவீதம் முதல் 153 சதவீதம் வரை அதிகரித்திருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. | பயிற்சி நிலையங்கள் தொடங்குவதற்கு வழங்கப்பட்ட ஏற்பாடுகள் பயிற்சி நிகழ்சித் திட்டங்களின் ஆவணங்கள் எதிர்பார்க்கப்பட்டவாறு இன்மையால் செலவினங்களிற்கு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நெகிழ்ச்சி அடிப்படை மற்றும் முறையான எதிர்வுகூறல் என்பன பாதீட்டு மதிப்பீடுகளை செய்வதற்கு மீளாய்வு செய்யப்பட வேண்டும். |

## 2.2 கணக்கீட்டு உத்தியோகத்தரின் சான்றுபடுத்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தர் பின்வரும் கருத்துகள் மீது உறுதிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், இதன்படி இது செய்யப்பட்டிருக்கவில்லை. நிதிக் கட்டுப்பாட்டிற்காக திணைக்களத்தால் வினைத்திறனான உள்ளக கட்டுப்பாட்டு முறையை விருத்தி செய்யப்பட்டு பேணப்பட்டிருந்ததென கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்தப்பட வேண்டும். வினைத்திறனான முறைமை காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட வேண்டியதுடன் இதன்ப வினைத்திறனான முறைமையை செய்வதற்கு அவசியமான மாற்றங்கள் செய்யப்பட வேண்டியதுடன் அந்த மீளாய்வகள் எழுத்து மூலம் செய்யப்பட்டு அதன் பிரதி கணக்காய்வாளர் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அத்தகைய மீளாய்வு கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | வழங்கப்பட்ட ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டியிருந்தது. | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். |

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| கட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் உட்பிரிவு 16(2) | பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரால் நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து சமர்ப்பிக்க வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கையை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு படிமுறைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை | காலக்கிரமத்தில் குறிப்பிடப்பட்டவாறு நடவடிக்கை எடுக்கப்படும். | அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும்.. |
| (ஆ) இலங்கை சனநாயக குடியரசின் குடியரசின் தாபன விதிக் கோவை அத்தியாயம் XV இன் பிரிவகள் 10.4 மற்றும் 10.10 | இணைப்பு 16 இன் பிரகாரம் பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பங்களின் மேலதிக பிரதிகள் மற்றும் வெளிநாட்டு விடுமுறைக்காக உத்தியோகத்தரின் அனுமதிக்கப்பட்ட கடிதத்தின் பிரதி என்பன வெளிநாட்டு நிறுனமென்றின் ஆதரவுடன் வழங்கப்பட்ட கற்கை, பயிற்சி, புலமைப்பரிசில், கருத்தரங்கு அல்லது செயலமர்வுகள் என்பவற்றிற்காக வெள்நாடு செல்கையில் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திற்கு முன்வைக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது மேற்குறித்த ஏற்பாடுகளின் பிரகாரம் 09 உத்தியோகத்தர்களின் 11 வெளிநாட்டு பயணங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வெளிநாட்டு பயணத்திற்காக பிரதம மந்திரி அலுவலகத்திற்கு கடிதம் சமர்ப்பித்தலை நிறுத்திய பின்னர் ூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பங்களின் மேலதிக பிரதிகள் மற்றும் வெளிநாட்டு விடுமுறைக்காக உத்தியோகத்தரின் அனுமதிக்கப்பட்ட கடிதத்தின் பிரதி என்பன பின்பற்ற வேண்டிய தாபனவிதிக் கோவையின் இணைப்பு 16 அறிவுறுத்தலின் பிரகாரம் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திற்கு முன்வைக்கப்படும் | தாபனவிதிக் கேவையின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) இலங்கை சனநாயக குடியரசின் குடியரசின் நிதிப்பிரமாணம் | | | |
| (i) நிதிப்பிரமாணம் 565 (5) | ஒவ்வொரு மாதத்திற்காகவும் பொது 71 படிவம் தயாரிக்கையில் தயரிக்கப்பட்ட மாதாந்த பொழிப்பு அடுத்துவரும் மாதத்தின் இறுதிக்கு மன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் இது அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை | தயரிப்பதற்கு படிமுறைகள் எடுக்கப்படுவதுடன் 2024 ஏப்ரலில் இருந்து இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படும். | நிதிப்பிரமாணத்தின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும்.. |
| (ii)நிதிப்பிரமாணம் 571(2)(3) | ரூபா 348,933 தொகையான பொது வைப்புகள் 02 ஆண்டுகளிற்கு மேலாக உரிய கணக்கிற்கு அல்லது அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு படிமுறைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை | நி.பி 571 இன் பிரகாரம் அந்த வைப்புகளை தீர்ப்பனவு செய்வதற் படிமுறைகள் எடுக்கப்படுகின்றன. | நிதிப்பிரமாணத்தின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும்.. |
| (ஈ) 2008 பெப்ரவரி 06 ஆந் திகதிய 05/2008 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை பிரிவு 1.4 XVIII | நிறுவனத்தால் குடியுரிமையாளரின் நடத்தை கட்டமைக்கப்பட்ட போதிலும் அலுவலக வளவில் நடத்தை காட்சிகள் வெளியிடும் நேரத்தில் வேண்டுகைகள் செயற்படுத்த வேண்டியிருந்தது. குறைந்தது 06 மாதங்களிற்கு ஒருதடவை அலுவலக இணைய தளத்தில் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை | திணைக்களத்தின் வேண்டுகைளில் இடர் முகாமைத்துவ பிரிவின் மேலதிக செயலாளரின் தலைமையில் இது தொடர்பில் நடவடிக்கைகள் தொடங்கப்பட்டிருந்தது திணைக்களத்திடமிருந் து கோரப்பட்ட தகவல்கள் இடர் முகாமைத்துவ திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. இதன்படி நடத்தை தயாரித்த பின்னர் மேலும் வேலைகள் சமர்ப்பிக்கப்படும். | சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) 2017 ஏப்ரல் 19 ஆந் திகதிய 3/2017 ஆம் இலக்கம், 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்கம் மற்றும் 2001 ஆகஸ்ட் 07 ஆந் திகதிய 15/2001 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | பிராந்திய அலுவலகங்களில் விரல் அடையாள இயந்திரங்கள் மூலம் அலுவலகத்தின் உள்வருகை மற்றும் வெளிச் செல்கையை மெய்மையாய்வு செய்யாமல் 2023 ஆம் ஆண்டில் 1/20 படிகள் மற்றும் மேலதிக நேர படிகள் என்பனவாக ரூபா 24,941,323 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. | இந்த நிலையை கட்டுப்படுத்தும் நோக்கில் இருக்கின்ற நிதியளிப்பு எல்லை அடிப்படையில் பிராந்திய அலுவலகங்களிற்காக விரல் அடையாள இயந்திரங்கள் கொள்வனவு செய்வதற்கு படிமுறைகள் எடுக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். |

## 2.4 அரச உத்தியோகத்தர்களற்கான முற்பணங்களை வழங்குதல் மற்றும் தீர்ப்பனவு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2010 யூலை 08 இலிருந்து உத்தியோகத்தரிடமிருந்து பெறவேண்டிய ரூபா 94,830 ஆன இடர் கடன்கள் மற்றும் ரூபா 27,000 ஆக வாகனக் கடன்கள் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடன் செலுத்தாத இந்த உத்தியோகத்தரிற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு 2024 பெப்ரவரி 09 இல் சட்ட மா அதிபர் திணைக்கத்திற்கு கோவைகள் அனுப்பப்பட்டிருந்தது. | உத்தியோகத்தர் கடன் மீதிகளை உடனடியாக அறவிடவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 கடமைகளை செய்யாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2023 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கை திட்டம் 2023 யூன் 15 இல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் இது திருத்திய பாதீட்டு ஏற்பாடுகளுக்கமைய தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் மொத்த ஒதுக்கீடு ரூபா 493.1 மில்லியனாக இருந்ததுடன் திருத்தப்பட்ட பாதீட்டின் பிரகாரம் ரூபா 515.1 மில்லியனாக இருந்தது | 2023 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கை திட்டம் பாராளுமன்றத்தின் நியம பாதீடின் பிரகாரம் 2023 ஆம் ஆண்டிற்காக அனுமதிக்கப்பட்ட ஆரம்ப பாதீடின் பிரகாரம் 2023 யூன் 15 இல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப் பட்டிருந்ததுடன் இது திருத்திய பாதீட்டிற்கு அமைய தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | திருத்தப்பட்ட பாதீட்டு ஏற்பாட்டிற்கமைய செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) நிறுவனத்தின் மற்றும் தொடர்புபட்ட தகவல்களிலிருந்து 2021 முதல் 2025 வரையான ஆண்டுகளற்காக தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட CRESMPA நவீனமயப்படுத்தல் செயற் திட்டத்தின் கீழ் அமுலாக்கப்பட்ட செயற்திட்டங்களின் முன்னேற்றம் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | நவீனமயப்படுத்தல் செயற்திட்டம் (CResMPA) வழிமண்டலவியல் திணைக்களத்தின் 2021 - 2025 வரையான ஐந்து ஆண்டுகளில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், அந்த செயற்திட்டம் தொடர்புபட்ட தகவல்கள் மற்றும் அதன் முன்னேற்றம் நீக்கலால் 2024 வருடாந்த செயல்நடவடிக்கை திட்டத்திலும் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. இதனை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கூட்டிணைந்த திட்டம் மற்றும் தொடர்புட்ட தகவல்களில் அமுலாக்கப்பட்ட செயற்திட்டங்களின் முன்னேற்றம் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டும். |

## 3.2 கொள்வனவுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 06 கொள்வனவு நடவடிக்கைகளிற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 15.6 மில்லியன் தொகை விதப்புரைகளை பெற இயலாமையால் இரத்து செய்யப்பட்டிருந்தது. | இது விதப்புரைகளை பெற இயலாமையால் இரத்து செய்யப்பட்டிருந்தது. | கொள்வனவு திட்டத்தின் பிரகாரம் பணிகள் செய்யப்பட வேண்டும். |

## 3.3 சொத்து முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வெப்பமாணி, ஈரப்பதம், மழைமாணி, காற்றலை விசை, திசைமாணி, அமுக்கமாணி மற்றும் சூரிய கதிர்வீச்சு போன்ற அளவை மாணிகள் மற்றும் தேவைப்பட்ட வசதிகளை செய்வதற்கு 2008 ஆம் ஆண்டில் ஜப்பான் உதவியின் (JICA) கீழ் பெறப்பட்ட ரூபா 570 மில்லியன் பெறுமதியான 38 தானியங்கி வளிமண்டலவியல் முறைமைகளில் 35 உயர்ந் பெறுமதியுடைய உபகரணங்கள் குறை பயன்பாட்டுடன் இருப்பதற்கு அனுமதிக்கப்பட்டதால் பயன்பாடு இழக்கப்பட்டது. இருக்கின்ற 03 முறைமைகள் 2023 மே 31 கணக்காய்வு திகதிவரை கட்டுநாயக்க விமான நிலையம், திருகோணமலை மற்றும் மலிபோடாவில் பொருத்தப் பட்டிருக்கவில்லை. | அவதானிப்புகளுடன் உடன்படுகின்றோம் | உயர்ந்த பெறுமதியுடைய உபகரணங்களை முறையாக பயன்படுத்தவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | குறிப்பிடப்பட்டவாறு GPRS தொழில் நுட்பத்தின் கீழ் பொருத்தப்பட்ட 35 தானியங்களி காலநிலை முறைமைகளில் 14 இலிருந்து மாத்திரம் தரவு பெறப்பட்டதுடன் 10 நிலையங்களின் பற்றறியின் பயன்பாட்டுக் காலம் காலாவதி யாகியமையால் செயற்படாது இருந்தது. தானியங்கி தரவு சேகரிப்பு இயலளவு திடீரென காலநிலை மாற்றம் ஆபத்தான நிலையில் உள்ளதுடன் இந்த காரணங்களால் முறைமை தாபித்த் ஊடாக நோக்கங்களை அடைய முடியாதிருந்ததௌ அவதானிக்கப்பட்டது. | அவதானிப்புகளுடன் உடன்படுகின்றோம். | செயற்படாற்ற நிலையில் இருந்த தானியங்கி வளிமண்டலவியல் நிலையங்கள் தொடர்பில் புலனாய்வுகள் நடாத்த வேண்டியதுடன் முறையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 453 மழை அளவை மாணி நாடுபூராவும் பொருத்தப்பட்டிருந்ததுடன் இது அவற்றினுடைய தற்போமைய செயற்பாட்டின் படி 44 மழை அளவை மாணி தொடர்ச்சியாக தரவு சேகரித்திருககவில்லை என அவதானிக்கப்பட்டதுடன் பெறப்படும் தரவுகளை அவர்கள் முறையாக பராமரித்திருக்கவில்லை. | அவதானிப்புகளுடன் உடன்படுகின்றோம். | தொடர்ச்சியாக பெறப்பட்ட தரவிற்கு முறையான பராமரிப்பு முறை தாபிக்கப்பட வேண்டியதுடன் தொடர்ச்சியாக தரவு பெறுவதற்காக பராமரிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | திணைக்களத்தல் 122 தானியங்கி மழை அளவை மாணி தாபிக்கப்பட்டிருந்ததுடன் ஏற்தாழ 70 மழை அளவை மாணிகள் 2023 மே 31 இல் உள்ளவாறு அமுலாக்கல் நிலையில் உள்ளன. இதன்படி, 52 மழை அளவை மாணிகள் செயற்பாடற்று இருந்ததுடன் 2023 நவம்பர 30 இல் உள்ளவாறு 36 மழை அளவை மாணிகள் மாத்திரமே பராமரிக்கப்பட்டிருந்தது. | அவதானிப்புகளுடன் உடன்படுகின்றோம். | செயற்பாடற்ற மழை அளவை மாணிகள் செயற்படுததப்பட வெண்டியதுடன் முறையாக பராமரிக்கப்பட வேண்டும். |
| (உ) | 2018 முதல் 2023 வரையான 06 ஆண்டுகளிற்காக திணைக்களத்தில் ரூபா 1,985,000 கிரயத்தில் கப் வாகனம் திருத்தப்பட்டிருந்ததுடன் ஓட்டத்திற்கு பயன்படுத்தாமல் அகற்றப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது காப்புறுதிக் கட்டணமாக ரூபா 30,117 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. | கப் வாகன பராமரிப்ப வேலைகளிற்காக கேள்வி கோரப்பட்டிருந்தது. கேள்விகள் இறுதி திகதியான 2024.04.30 இல் சமர்ப்பிக்கப்பட வேண்டும். சமர்ப்பக்கப்பட்ட கேள்வி விலையை கருத்திற்கொண்டு சொல்லப்பட்ட திகதிக்கு பின்னரே வாகன திருத்தங்கள மேற்கொள்ளப்பட்டது | வாகனங்கள் முறையாக திருத்தப்பட வேண்டியதுடன் ஓடும் நிலைக்கு கொண்டுவர வேண்டும். |

### 3.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கொத்மலையில் அமைந்திருந்த சர்வதேச நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்தவ பயிற்சி நிறுவகத்தில் இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் வளிமண்டலவியல் அவதானிப்பு உத்தயோகத்தர்களிற்காக நடாத்தபபட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றி உத்தியோகத்தர்களிற்காக தேவைான உணவு, குடிதண்ணீர், சுகாதார வசதிகள் என்பவற்றினை திருப்திகரமாக வுழங்குவதற்கு உரிய நிறுவனம் நடவடிககை எடுத்திருக்காததுடன் நிதழ்ச்சித்திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட ஊழியர் ஊக்குவிப்பு வழங்கப்பட்டிருக்காததுடன் அதற்கான செலவழிக்கப்பட்ட ரூபா 415,800 சிக்கனமாற்ற செலவினமாக உள்ளதென அவதானிக்கப்பட்டது. நடாத்தப்பட வேண்டுமென திட்டமிடப்பட்ட இரண்டாவது நிகழ்ச்சித்திட்டம் போதிய உத்தியோகத்தர்கள் பங்குபற்றாமையால் இரத்து செய்யப்பட வேண்டியிருந்தது. | அவதானிப்புகளுடன் உடன்படுகின்றோம். | முறையான திட்டத்தின் பிரகாரம் உத்தியோகத்தர்களிற்கு நிறுவகத்தால் வழங்கப்பட்ட பாட நெறி பங்குபற்றல் மற்றும் முறையான தயார்படுத்தல் அவற்றினை பூர்த்தியாக்கும் முறை போன்ற பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் வேண்டும். |

### 3.5. முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | புத்தளம் மற்றும் பொத்துவில் வளிமண்டலவியல் நிலையங்களில் டொப்ளர் றீடர் முறைமையின் பொருத்துதலிற்காக 2019 முதல் 2022 வரையான ஆண்டுகளிற்கு ரூபா 563.58 மில்லியன் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டு இறுதியளவில் ரூா 0.462 மில்லியன் செலவினங்கள் மாத்திரம் ஏற்பட்டிருந்தது. ஒப்பந்தம் தொடங்கி 05 ஆண்டுகள் கடந்து ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு ராடர் முறைமையின் நிர்மாணம் 2020 ஆம் ஆண்டு இறுதியளவில் இறுதிக் கட்டத்தை அடையவேண்டியிருந்த போதிலும் செயற்திட்டத்தின் நிர்மாண வேலைகள் தற்போது விலைத் தளம்பல்களின் விளைவால் போதிய ஏற்பாடுகள் இன்மையால் தொடங்கப்பட்டிருக்கவில்லை. | டொப்ளர் ராடர் முறைமை வளிமண்டலவியல் எதிர்வு கூறலில் சரியான தகவலை பெறுவதற்கு உதவியாக உள்ள போதிலும் இது எதிரிவு கூறப்படுவதற்கான தகவல் முறையை மாத்திரம் கொண்டிருக்கவில்லை. காலநிலை மாற்றம் முன்னரே அடையாளம் காணப்பட்டிருந்ததென அறிவிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்வு கூறல்கள் திணைக்களத்தின் வரையறுத்த வளங்கள், ஏற்பாடுகள் கிடைக்காமை மற்றும் கட்டப்பாடு பின்தங்கிய சந்தர்ப்பங்களிற்கு முகம்கொடுத்தல் என்பவற்றின் அடிப்படையில் நியாயத்துடன் வழங்கப்பட்டிருந்தது. அத்துடன் | இதன்படி, வளிமண்டலவியல் எதிர்வுகூறலில் டொப்ளர் ராடர் முறைமைகாக வலுப்படுத்தல் தேவைப்பட்டதுடன் இந்த செற்திட்டத்தை வெற்றிகரமாக செயற்படுத்துவதற்கு முயற்சிகள் எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வளிமண்டலவியல் எதிர்வுகூறலிற்கு டொப்ளர் ராடர் முறைமைக்கான தேவை வலுவாக இருந்த போதிலும் வழங்கப்பட்ட வளிமண்டலவியல் எதிர்வுகூறல்கள் கொண்டிருக்கின்ற சிறந்த உண்மைத்தன்மை மற்றும் நியாயத்தை எதிர்வுகூறி கணித்து வழங்குவதற்கு இயலக்கூடுமா என நிர்ணயிப்பதற்கு சாத்தியம் இருக்காததுடன் ஏறத்தாழ 15 ஆண்டுகளாக அந்த முறைமை இல்லாமல் இருந்தன. | அவற்றின் மூலமான பல சற்றுச்சூழல் பிரச்சனைகளிலிருந்து இலங்கையை பாதுபாப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டிருந்தது. | |
| (ஆ) | உயர் காற்று அவதானிப்பு, காற்று அமுக்க வெப்பம், ஈரப்பதம், சாற்று வேகம் மற்றும் வீசும் திசை, உயர் காற்று அவதானிப்பு தரவு என்பன வானொலி கருவி ஊடாக பெறப்பட்டிருந்த பொதிலும், 2022 இல் அனுப்ப வேண்டியிருந்த 156 கருவிகளில் 141 இற்காக மற்றும் 2023 ஆகஸ்ட் 31 அளவில் செய்ய வேண்டியிருந்த 104 கருவிகளில் 83 இற்காக உயர்ந்த சுமாட் அவதானிப்பு தரவு முறையான திட்டமில் பிரகாரம் கொள்வனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்காமையால் பெறப்பட்டிருக்கவில்லை. செய்யப்பட்டிருக்காத வானொலி அவதானிப்பு தடவைகளின் எண்ணிக்கை செய்யப்பட வேண்டியருந்த அண்ணளவான எண்ணிக்கைகளில் 86 சதவீதம் மாத்திரமே செய்யப்பட்டிருந்தது. | அவதானிப்புகளுடன் உடன்படுகின்றோம். | திணைக்களத்தின் குறித்துரைக்கப்பட்ட நடைமுகைளின் பிரகரம் பலூன் வானலை மூலம் உயர்ந்த சுமாட் அவதானிப்பு தரவினை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | குதறைந்த மட்டத்தில்ருந்து நடுத்தர மட்டத்திற்கு காற்றின் வேகம் மற்றும் திசை அளவிடுவதற்கு திணைக்களத்தின் குறிப்பிடப்பட்ட நடைமுறை பிரகாரம் நாள் ஒன்றிற்கு 03 தடவைகளில் ஒவ்வொன்றின் மீதும் 04 அவதானிப்பு நிலையங்களில் முன்னோடி பலூன்கள் அதவானிக்க வேண்டிய போதிலும் 2023 ஆம் ஆண்டில் அவதானிப்புகளின் விடயம் திட்டமிட்ட வழியில் மேற் கொள்ளப்பட்டிருக்காத அந்த நொக்கத்திற்கு தேவைப்பட்ட 4000 விமானிகள் பலூன்கள் கொள்வனவு நடைமுறை தாக்கம் காரணமாக பட்டியலிடப்பட்டவாறு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புகளுடன் உடன்படுகின்றோம். | திணைக்களத்தின் குறித்துரைக்கப்பட்ட நடைமுகைளின் பிரகரம் பலூன் விமானிகள் பலூன் தரவு மூலம் நடுத்தர மட்ட சுமாட் அவதானிப்பு தரவிற்கு குறைவாக பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். . |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | வானலை மற்றும் விமானிகள் பலூன்கள நிரப்புவதற்கு ஐதரசன் வாயு பயன்படுத்தப்பட்டதுடன் கொழும்பில் ஐதரசன் வாயு அறிமுகப்படுத்தவதற்கு ஐதரசன் மின் பிறப்பாக்கிகள் பயன்படுத்தப்பட்டது. கொழும்பு வளிமண்டலவியல் நிலையதில் நடாத்தப்பட்ட பௌதீக பரிசோதனைகளின் போது ஐதரசன் உற்பத்தி செய்யும் போது அந்த உத்தியோகத்தர்களால் வெப்பமற்ற ஆடையணிதல் மற்றும் அனுப்பபடுகின்ற பலூன்கள், ஐதரசன் பொறிக்கு அண்மையில் வாகன தரிப்பிடம், அலைவரிசை போன்ற அத்தகைய பாதுகாப்பற்ற நடைமுறை மிகவும் ஆபத்தாக உள்ளதென அவதானிக்கப்பட்டது. . | அவதானிப்புகளுடன் உடன்படுகின்றோம். | ஐதரசன் உற்பத்தி நடைமுறை மிகவும் ஆபத்தாக உள்ளதுடன் இதற்கு பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்ற வேண்டும். |
| (உ) | விமானங்கள், தகவல்தொடர்பு உபகரணங்களை பராமரித்தல் போன்றவற்றிற்காக தேவையான காலநிலை தகவல்களை வழங்கும் நோக்கில் இரத்மலானை விமான நிலையத்திற்கு அருகில் தாபிக்கப்பட்டிருந்த வளிமண்டலவியல் நிலையத்திலிருந்து காலநிலை தரவு பெறுதல், திடீர் வன்காற்றினை பரிசோதிப்பதற்கு வன்காற்று பரிசோதனைக் கருவி (Gust Recorder), அதன் விரைவு மற்றும் நெறிப்படுத்தல் என்பன தொடங்கிய போது உலக வளிமண்டலவியல் சங்கத்தின் வழிகாட்டல் பிரகாரம் கருவி பெட்டி தயாரிப்பதற்கு தவறியிருந்ததென அவதானிக்கப்பட்டது. 2019 இலிருந்து பிராந்திய வளிமண்டலவியல் அலுவலகங்களிற்கு மாற்றப்படுகின்ற கணனி முறைமைகள் பல ஆண்டுகளாக பயனற்று இருந்தது. பெட்டிகளின் தூண்களின் அழிவு வெப்பமாணி கருவி பெட்டியில் ஏற்றப்பட்டிருந்தது. | அவதானிப்புகளுடன் உடன்படுகின்றோம். | உலக வளிமண்டலவியல் வழிகாட்டல்கள் பின்பற்றப்பட வேண்டும். |
| (ஊ) | திணைக்களத்தின் வளிமண்டலவியல் பிராந்திய அலுவலகங்கள் அமைந்திருந்த அநுராதபுரம், மட்டக்களப்பு, கட்டுகஸ்தோட்டை, மகைலுப்பள்ளம், மன்னார், இரத்தினபுரி, குருநாகல், வவுனியா, முல்லலைதீவு போன்ற 09 காணிகள் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புகளுடன் உடன்படுகின்றோம். | திணைக்களத்துடன் தொடர்புபட்ட பகுதிகளை கையேற்பதற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 4. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்திலுள்ள பதவிகளின் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை 462 ஆக உள்ளதுடன் உள்ளபடியான பதவியணியினர் 349 ஆக இருந்தமையால் 113 எண்ணிக்கையான வெற்றிடங்கள் உள்ளன. அவற்றில் 16 வெற்றிடங்கள் நீண்டகாலமாக வெற்றிடமாகவிருந்த மேலதிக பணிப்பாளர், உள்ளக கணக்காய்வாளர், 04 பணிப்பாளர் தரங்கள், 08 வளிமண்டலவியலாளர் தரங்கள் மற்றும் 02 மின்னியல் பொறியியலாளர் பதவி பொன்ற பெயருடைய திணைக்களத்தின் உடர்மட்ட நிலைகளை கொண்டிருந்தது. அந்த பதவிகளிற்காக உத்தியோகத்தர்களை சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமைமையால் திணைக்களத்தின் நோக்கங்களை அடைவதற்கு கூடிய பங்களிப்பு செய்கின்ற அந்த பதவிகளின் செயற்பாடுகள் திணைக்களத்தின் செயலாற்றல், நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகளை செய்வதற்கு இடையூறாக இருந்தது. | வெற்றிடமாக இருந்த திணைக்களத்தின் 16 சிரேஸ்ர மட்ட பதவிகளை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. | திணைக்களத்தின் அடிப்படை பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு முயற்சி எடுக்கப்பட வேண்டும். |